1980 ஏப்ரல் 6]

கலப்புமணத் தம்பதிகளுக்கு வேலைவாய்ப்பு.

*2113—திரு. கே. ஆர். ஜி. தனபாலன் :

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கலப்பு மணத் தம்பதிகளுக்கு கல்வி மற்றும் அரசுத் துறை வேலை வாய்ப்புகளில் சிறப்பு ஒதுக்கீடு செய்து தரப்படுமா?

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் ; மாண்புமிகு தலைவர் அவர்களே,

கலப்புத் திருமண தம்பதியரின் குழந்தைகளுக்கு மருத்துவம், பொறியியல் போன்றவற்றில் சேர்ந்து பயில இட ஒதுக்கீடு செய்ய ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் வேலை வாய்ப்பகத்தில் பதிவு செய்துள்ள கலப்பு மணத் தம்பதியர்களுக்கு அங்கிருந்து அரசு வேலைகளுக்கு பட்டியல் அனுப்பி வைக்கப்படும் போது, அவர்களுக்கு முன்னுரிமை அளிக்க ஆணை வழங்கப்பட்டுள்ளது.

திரு. கே. ஆர். ஜி. தனபாலன் : பேரவைத் தலைவர் அவர்களே, கலப்புத் திருமணத்தை ஊக்கப்படுத்தும் இந்த அரசு, உடல் ஊனமுற்றவர்களுக்கு கல்வியிலும், வேலைவாய்ப்புகளிலும் 3 சதவிகிதம் இட ஒதுக்கீடு அனுமதித்தது போல, கலப்புத் திருமணம் செய்கின்றவர்களுடைய குழந்தைகளுக்கு கல்வியிலும், வேலைவாய்ப்பிலும் இட ஒதுக்கீடு செய்ய முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அரசு வேலைவாய்ப்புகளில் சிறப்பு ஒதுக்கீடு அளிக்க இதுவரை ஆணை ஏதும் பிறப்பிக்கப்படவில்லை. இது அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சமுதாய நலக்கூடம் ஆக்கிரமிப்பு

6519. திரு. ஏ. தங்கராஜு :

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கன்னியாகுமாரியில் 1956 ஆம் ஆண்டில் கட்டப்பட்ட சமுதாய நலக்கூடத்தை தனியார் ஒருவர் ஆக்கிரமித்திருப்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?